| | | |
|---|---|---|
| அ.வ.எண். | **:** | **230/2014** |
| தேதி | **:** | **26.03.2026.** |
| பெயர் | **:** | **அருள் (எ) அருள்செல்வம் த/பெ சின்னையன்.** |

**பி.வா.த.சா.1 (DW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**பி.<u>வா.த.சா.1. (DW1) - குறுக்கு விசாரணை:</u>**

1) இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி எனது தாயார் மற்றும் 3ம் பிரதிவாதி எனது இளைய சகோதரி என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதில் உரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் படித்து பார்த்து தெரிந்துகொண்டேன். வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவில் உள்ள விவரங்கள் படித்து பார்த்து தெரிந்துகொண்டேன். வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2) வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்றும், அந்த சொத்தில் நான் நீதிமன்றத உத்தரவை மீறி குடிசை அமைத்து குடியிருந்து வருகிறேன் என்றாலும் அதை அப்புறப்படுத்துவதற்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புல எண் 560B1 அதன் விஸ்தீரணம் 90 அடி நீளம், 24 அடி அகலம் ஆகும். மேற்சொன்ன புல எண்ணில் தான் நான் குடிசை அமைத்து வசித்து வருகிறேன். மேற்சொன்ன புல எண் மற்றும் விஸ்தீரணம் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல.

3) தாவா சொத்தில் 50 ஆண்டுகளாக குடியிருந்து வருவதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கு உரிமைக்கான எந்தவித ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. குறிப்பாக பட்டா மற்றும் பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்தின் பட்டாவானது 1ம் வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவை ரத்து செய்வதற்காக வட்டாச்சியரிடம் மனு கொடுத்திருப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். அந்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4) தாவா சொத்தின் பட்டாவனது 1ம் வாதியின் பெயரில் இருந்து இதுவரை ரத்து செய்யப்படவில்லை எனது பெயருக்கும் மாற்றம் செய்து தரப்படவில்லை. தாவா சொத்தில் நாங்கள் அத்துமீறி நுழைந்து குடிசை அமைக்க முயற்சித்ததாக எங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு எண் அசல் வழக்கு எண் 710/2005, பூந்தமல்லி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 18.04.2006 ல் தாவா சொத்தில் நுழைவதற்கு எனக்கு எதிராக உறுத்துக்கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.

5) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன உத்தரவு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன உத்தரவை நான் படித்து பார்க்கவில்லை. அசல் வழக்கு எண் 710/2005 யை தாக்கல் செய்யும்போது நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், எண் 33, பஜனை கோவில் தெரு, கொரட்டூர் சென்னை 80 என்ற முகவரியில் தான் வசித்து வந்தேன் என்றாலும் சரிதான். நான் கடந்த 26.06.2007 ம் தேதி தாவா சொத்து காலியா இருப்பதை அறிந்து கொண்டு அடியாட்களுடன் அத்தூமீறி நுழைந்து குடிசை அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் மாங்காடு காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டது. அந்த புகார் சம்பந்தமான விசாரணைக்கு நான் ஆஜராகினேன்.

6) 07.07.2007 ம் தேதி எனக்கு எதிராக வாதி நீதிமன்ற அவமதிப்புசெய்துவிட்டதாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அவ்வாறு எந்த அறிவிப்பு எனக்கு வரவில்லை. நான் நீதிமன்ற அவமதிப்பு செய்ததற்காக எனக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் EP. No. 63/2009 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் எனது தாயாரான 1ம் பிரதிவாதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் சரிதான். எனது தாயார் கைது செய்யப்பட்டபோது நாங்கள் சொத்தில் இருந்து காலிசெய்துகொள்வதாக இந்நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளோம் என்றால் சரிதான்.

7) எனது தாயார் கைது செய்யப்பட்டு நாங்கள் கொடுத்த உறுதிமொழியின் அடிப்படையில் நாங்கள் இது வரை தாவா சொத்தில் இருந்து காலிசெய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 1671/2008 என்ற வழக்கில் தாவா சொத்தில் எங்களுக்கு பாகம் உள்ளதா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில்

குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் எனது பதில் உரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 1671/2008 அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) நான் எனது பதில் உரையில் அசல் வழக்கு எண் 497/2014 ஆக தாவா சொத்தில் பாகம் இருப்பதாக வழக்கு தொடுத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 497/2014 அதன் இடைநிலை மனு எண் 2140/2015 , 02.02.2023 ல் உரிய பரிகாரம் கோரப்படாமல் தள்ளுபடி செய்ப்பட்டுவிட்ட விவரங்கள் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி குடியிருந்து வருவதால் தான் இவ்வழக்கின் மனுவில் ஒவ்வொரு மனுவாக தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல.

9) தாவா சொத்து ஆதியில் முனியன் என்பவருக்கு சொந்தமானது என்றும் அதன் பின்னர் அவரது மகன் முனுசாமி என்பவருக்கு பாகமாக கிடைக்கப்பட்டு முனுசாமியின் மகன்கள் சின்யைன், மயில்வேல் ஆகியோருக்கு கூட்டாக கிடைக்கப்பட்டு அவர்களிடம் இருந்து சின்னையன் வாரிசு என்ற முறையில் எங்களுக்கு பாகமாக வந்தது என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதை நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10) தாவா சொத்தில் மின் இணைப்பு பெற்றதை நிருபிக்க எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிவாதசாஆ 1 வழக்கறிஞர் அறிவிப்பு வாதிகளுக்கு அனுப்பபட்டதற்கான அஞ்சலக ரசீதோ அல்லது வாதிகள் அதை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சீட்டோ எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாதசாஆ 1ல் தாவா சொத்து விவரத்தில் புல எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிவாதசாஆ 1ல் தாவா சொத்து விஸ்தீரணமானது 120 அடி நீளம் மற்றும் 30 அடி அகலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாதசாஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்திற்கும் தாவா சொத்து விவரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

11) பிவாதசாஆ 1 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிவாதசாஆ 2 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அந்த ஆவணத்தை நான் சார்பு செய்யவில்லை எனது தாயார் தான் மாவட்ட கலெக்டரிடம் அளித்தார். அதை அளித்ததற்கான சான்று ஒப்பம் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிவாதசாஆ 2 அசலாக

உள்ளது என்றால் சரிதான். பிவாதசாஆ 2 உரிய அதிகாரிடம் வழங்காமல் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிவாதசாஆ 3 காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாருக்கு புகார் ஏற்பு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதுவும் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12) பிவாதசாஆ 5 முதல் 7 வீட்டு வரி ரசீதுகள் எந்த சொத்திற்கு சொந்தமானது என்று அதற்கான உரிமை ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை. பிவாதசாஆ 5 முதல் 7 ஆவணங்கள் 2008, 2009 ல் ஆண்டில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 2010 ம் ஆண்டில் இருந்து என்னை வீட்டு வரி கட்டுவதற்கு அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. 2009 க்கு பின்னர் வீட்டு வரி செலுத்தியதற்கான எந்த ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் அதன் பின்னர் நாங்கள் வரி செலுத்து முடியவில்லை என்றால் சரிதான்.

13) மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் வீட்டு வரி செலுத்துவதற்கு மறுப்பு தெரிவித்து உத்தரவு ஆணை **வாதசாஆ 9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பிவாதசாஆ 8 உரிய அதிகாரியால் வழங்கப்படவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிவாதசாஆ 9 குடும்ப அட்டை 2017 ம் வருடம் தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாதசாஆ 10 ஆதார் அட்டைவழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமை இல்லை என்றாலும், நீதிமன்ற உத்தரவு படி தாவா சொத்தில் இருந்து அகற்றப்படவேண்டும் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. EA No. 3/2012 in EP No. 63/2009 ல் நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கையொப்பம் **Sd/.** அருள்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.